1973 பிப்ரவரி 7]

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, கிட்டத்தட்ட 6 மாதங்களுக்கு இந்த வாகன்கள் கிடைக்காத காரணத்தாலே உப்பு உற்பத்தியே பாதிக்கப்பட்டிருக்கிறது. உற்பத்தி செய்யப்பட்ட உப்பும் விற்கப்படமுடியாமல் கிட்டத்தட்ட 15 ஆயிரம் தொழிலாளர்கள் இன்றைய தினத்திலே அங்கே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன். இரண்டாவதாக, இது வரையிலே உற்பத்தி செய்த உப்பு பல மாதங்களாகத் தங்கியிருந்தபடியால், அதை வாங்குவதற்கும் யாரும் வரவில்லை என்பதும் மேலும் உப்பு உற்பத்தி பாதிக்கப் பட்டிருக்கிறது என்பதும் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? தொழிலாளர்களுடைய நலம் பாதிக்கப்படுகிற காரணத்தாலே, அமைச்சர் அவர்கள் உடனடியாக மத்திய அரசிடம் கேட்டு வாகன்கள் சப்ளை செய்ய வழிவகைகள் செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தப் பிரச்சினை அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்தவுடன் அரசாங்கமே முயற்சி எடுத்து எப்படியாவது அப்போதைக்கப்போது வாகன்கள் உடனடியாகக் கிடைக்கக்கூடிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். இது உப்புக்கு மட்டுமல்ல, பொதுவாகவே வாகன்கள் மூவ்மெண்டில், சரியான ஒரு கோஆர்டினேஷன் இல்லாத காரணத்தாலே, அடிக்கடி சிக்கல்கள் ஏற்படுகின்றன. இது நம்முடைய கவனத்திற்கு வரும்போது, ரெயில்வேத் துறைக்கும், ரெயில்வே போர்டுக்கும் அடிக்கடி தெரிவித்துக் கொண்டிருக்கிறோம்.

Open Air Cinema Theatres

* 46 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there are proposals under the consideration of of the Government to permit open air cinema theatres in this State; and

(b) if so, the details thereof?

[1973 பிப்ரவரி 7

திறந்த வெளி திரைப்பட அரங்குகள்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) இம்மாநிலத்தில் திறந்தவெளி திரைப்பட அரங்குகளுக்கு அனுமதியளிப்பது குறித்து செயற்குறிப்புகள் எவையேனும் அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) அத்தகைய செயற்குறிப்பு எதுவும் இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: சினிமாத் தியேட்டர்களை அரசாங்கம் எடுத்துக்கொள்வதாக ஒரு கருத்தினை முதலமைச்சர் அவர்களே கூறினார்கள். அந்தத் திட்டம் எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் கூறும்போதே அதைப்பற்றி விவரம் கூறியிருக்கிறேன்.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இந்த சினிமாத் துறை அதிகமான மக்களை ஈடுபடுத்துவதால், செமி-பெர்மனென்ட் என்ற விதமான தியேட்டர்களைக் கிராமந்தோறும் ஏற்படுத்த வேண்டும். அதற்கு அரசாங்கம் கடன் வழங்க வேண்டுமென்று ஒரு திட்டத்தை தமிழக அரசு ஏற்படுத்தியிருக்கிறதா? இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு பணம் கடன் வழங்கியிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதற்கு 25 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே 10 லட்ச ரூபாய் பங்குத் தொகையாகவும், 15 லட்ச ரூபாய் கடனுதவியாகவும் வழங்க அரசாங்கம் சம்மதித்திருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: 'ஓபன் சினிமா தியேட்டர்ஸ்" தமிழகத்திலே எங்கேயாவது இருக்கின்றனவா? அப்படி இருந்தால், எத்தனை எத்தனை, எங்கெங்கே இருக்கின்றன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படி இல்லை.